# செயலாற்று அறிக்கை

# 2015

# உணவு ஆணையாளர் திணைக்களம்

இல. 330,

யூனியன் பிளேஸ்,

கொழும்பு 02.

தொலைபேசி: 011-2421211

தொலைநகல்: 011 – 2434291

## முகவுரை ...............

நாம் நாட்டிற்குத் தேவையான அரிசியினைப் பெற்றுக் கொள்வதில் இரண்டு வகையான பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றோம். அதாவது இயற்கை அழிவுகளினால் பயிற்செய்கை பாதிப்படைந்து நாட்டின் நுகர்வுக்குப் போதியளவிலான அரிசியினைப் பெற்றுக் கொள்வதில் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. மற்றையது போதுமான மழை வீழ்ச்சி மற்றும் சூரிய ஒளி என்பவற்றினூடாக மிகையான அறுவடை கிடைக்கப்பெறுவது. இவ்வாறான இரண்டு பிரச்சனைகளுடன் தொடர்புடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்கள் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றன. இருந்தபோதிலும், தற்போது எழுந்துள்ள பிரச்சனைகளுக்குத் தற்காலிகமாக தீர்வு காணப்பட்ட போதிலும், இத்தகைய பிரச்சனைகளுக்கு நீண்ட காலத் தீர்வினைக் காண்பதற்கான நடவடிக்கைகளினை எடுப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை.

சந்தையில் அரிசிக்குத் தடுப்பாடு ஏற்படும் போதெல்லாம் சந்தை விலை அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கான தேவை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. அத்துடன் மிகையான அரிசியினை நேரடியாக எற்றுமதி செய்யும் போது பின்னர் ஏற்படக்கூடிய தட்டுப்பாட்டினை ஈடு செய்வது குறித்தும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஆகையால், இவ்விடயம் யாவரும் அறிந்த விடயமாக இருப்பதுடன் இத்தகைய பிரச்சனைகள் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளினைத் தோற்றுவித்த போதிலும், உணவுத் திணைக்களமானது அதன் செயல்நிறைவேற்று அறிக்கையினுடாக பல்வேறு ஆண்டுகளாக பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேண வேண்டியதன் தேவையினை வலியுறுத்தி வந்துள்ளது.

எவ்வாறாயினும், நாம் அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதற்கான முறைமையினைக் கொண்டதாக இரண்டு மாடிக் களஞ்சியமொன்றினை நிருமாணிக்க முடிந்துள்ளதுடன் உரிய வசதிகளினைக் கொண்டதாக திணைக்களத்தின் தற்போதிருக்கும் களஞ்சியங்களினை மேம்படுத்துவதற்கும் பிரேரணைகளினை முன்வைத்துள்ளோம். உணவுத் திணைக்களமானது 2013/2014 இல் *பெரும்போக* காலப்பகுதியில் நிலவிய வரட்சியின் காரணமாக எதிர்பார்த்த அறுவடையினைப் பெற்றிருக்காமையினால் 2015 இல் அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணும் செயற்பாட்டிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளதுடன் குறித்த ஆண்டு காலப்பகுதியில் அரிசித் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு லங்கா சதொசவினூடாக அரிசி இறக்குமதி செய்யப்பட்டதுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பினைப் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான இடவசதியினை வழங்கும் நோக்கத்திற்காக திணைக்களமானது லங்கா சதொசவிற்கு அதன் களஞ்சியங்களினை குத்தகைக்கு வழங்கவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

மேலும், திணைக்களமானது 4300 மெ.தொ. அரிசி இருப்பினைக் களஞ்சியப்படுத்தி பேணும் பொறுப்பினைப் பொறுப்பேற்றுக் கொண்டது. அத்துடன் திணைக்களமானது சிறுபோக அறுவடையினைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வட மேல் மாகாணத்தில் புல்னேவா, கல்னேவாவிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் களஞ்சியங்களை விடுவிக்கும் பொருட்டு 2014/2015 நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் இருப்புக்களினைக்

களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வெயாங்கொடை களஞ்சியத் தொகுதியில் இடவசதியினை அளித்துள்ளது. மேற்படி விடயங்களினைக் கருத்தில் கொண்டு, 2015 இல் உணவுத் திணைக்களமானது அதன் பிரதான பணியான அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதிலிருந்நது விடுபட்டு அதன் களஞ்சியங்களினை வாடகைக்கு வழங்குவதனூடாக வருமானத்தினைச் சம்பாதித்தது.

லங்கா சதொசவிற்கு (கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்) வழங்கிய களஞ்சியங்களுக்கு மேலதிகமாக, திணைக்களத்திறகுச் சொந்தமான ஏனைய களஞ்சியங்கள் தனியார் துறை நிறுவனங்களுக்கும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க, திணைக்களமானது களஞ்சியங்கள் மற்றும் பிறிமா வீடுகளினை வாடகைக்கு வழங்குவதனூடாக முறையே ரூபா.73,140,466.30 உள்ளடங்கலாக ரூபா.77,749,259.89 மற்றும் ரூபா.4,608,793.89 இனை வாடகை வருமானமாக சம்பாதிக்க முடிந்துள்ளது.

அவ்வாறே, மீளாய்வு காலப்பகுதியில் கடன் மீதிகளினையும் இருப்பு நிலுவைகளினையும் அறவிடு செய்வதற்கும் கணிசமான மட்டத்தில் கடன் மீதிகளினைக் குறைப்பதற்கும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன். அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சேவையாக விளங்குவதால் தரக்கட்டுப்பாட்டுக்கான தகைமையும் அநுபவமும் வாய்ந்த அலுவலர் ஒருவரினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இப்பதவிக்கு பெண் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வருடத்தில் தரக்கட்டுப்பாட்டு அறிக்கைகளினைப் பெற்றுக் கொள்வதில் சில இடர்பாடுகள் காணப்பட்டதுடன் ஆய்வுகூட அறிக்கைகளினைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளமையானது இந்த ஆண்டில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கியமான நடவடிக்கையாகும். ஏழு விஞ்ஞான முறையிலான களஞ்சியங்களின் நிருமாணம் தொடர்பான கருத்திட்ட முன்மொழிவின் மீளாய்வின கௌரவ. அமைச்சர் ரிசாட் பதியுதீன், வரிசை அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் திரு.ரி.எம்.கே.பீ.ரி. தென்னக்கோன் அவர்களிடம் சமர்ப்பித்தமையானது இவ்வாண்டு காலப்பகுதியில் அடையப்பெற்ற சாதனையாகும். அவற்றிக்கான தமது அங்கீகாரங்களை வழங்கியமைக்காக எனத நன்றியறிதல்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விருப்புகின்றேன். திணைக்களமானது, உரிய அங்கீகாரம் மற்றும் தேவையான நிதி ஏற்பாடுகளினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த கருத்திட்ட அமுலாக்கத்தினூடாக 35000 மெ.தொன் அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதற்கு எதிர்பார்க்கின்றது.

பொருத்தமான உபாய திட்டமிடல் மற்றும் திடமானதும் சாத்தியமான நெறிமுறைகளுடன் கூடியதான பெறுகைகள் திட்டமிடலினூடாக 2015 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட பணியினை திறம்பட நிறைவேற்றுவதற்கு அயராது பாடுபட்ட இந்த திணைக்களத்தின் பதவியினர் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக

அமைச்சின் பதவியினர் மற்றும் ஏனைய பொது நிறுவனங்களின் பதவியினருக்கும் இவ்விடத்தில் எனது மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை உரிய வகையில் பேணிவதனூடாக "ஒவ்வொரு குடியானவனுக்கும் நிலையானதும் சத்துவாய்ந்ததுமான நிறைத் தானிய உணவுகளை கிடைக்கச் செய்தல்" எனும் இறுதி இலக்கினை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோமென பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.



என். நிமல்கா டயஸ்
உணவு ஆணையாளர் (பதில்)
2016 மார்ச் மாதம் 30 ஆம் திகதி

யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நோக்கும் செயற்பணியும் | 38 |
| 2. | உணவுத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் | 39 |
| 3. | நிருவாக கட்டமைப்பு | 40 |
| 4. | நிருவாக கட்டமைப்பும் பதவியினரும் | 41- 44 |
| 5. | கணக்காய்வும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் | 45 |
| 6. | நீதிமன்ற நடவடிக்கைகள் | 46- 48 |
| 7. | திணைக்கள களஞ்சியங்களும் வீடுகளும் | 49-55 |
| 8. | கணக்கீட்டு நடவடிக்கைகளின் மீளாய்வு | 56-57 |
| 9. | சொத்துக்களும் ஆதனமும் | 58 |
| 10. | வருமானமும் அறவீடுகளும் | 59 |
| 11. | நிதி அறிக்கைகள் | 60-62 |
| 12. | செயல்முறையும் முன்னேற்றமும் | 63 |

## (1).நோக்கும் செயற்பணியும்

■ **நோக்கு**

“தரமானஆரோக்கியமான
அத்தியாவசிய உணவுப்
பொருட்களை தட்டுப்பாடின்றி
வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல்”

■ **செயற்பணி**

“உணவுத் தானியங்களை சந்தையில்
இலகுவாக கொள்வனவு செய்வதற்கு
நுகர்வோருக்குவாய்ப்புக்களைப் பெற்றுக்
கொடுத்தல் மற்றும் நுகர்வோர் கொள்வனவு
செய்யக் கூடிய விலையில் அவற்றினை
வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல் மற்றும்
உணவுத் திணைக்களத்தின் கீழ்
தொழிற்படுகின்ற நிறுவனங்களின்
வளங்களை வினைத்திறனுடன்
பயன்படுத்துதல் மற்றும்
உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய
தொடர்பினைப் பேணுதனூடாக
திணைக்களத்தின் இலக்கினை அடைதல்”

## (2). உணவு திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்

**01. பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பின்(SAARC) கொழும்பு 16 ஆவது மாநாட்டின் கொழும்புத் தீர்மானத்தின்படி, விசேட அரிசிப் பாதுகாப்பு இருப்பினைப் பேணுதல்**

தென்னாசிய பிராந்தியத்தில் அவசரகால மற்றும் பேரிடர் காலப்பகுதியில் பயன்படுத்தவென 8000 மெ.தொ அரிசியினை இலங்கை பேணுதல் வேண்டுமென மேற்குறித்த நிறுவனத்தின் 16 ஆவது மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

**02. 2008/08/27 ஆம் திகதிய அமைச்சரவை தீரமானத்தின் படி, நாடு பூராகவுமுள்ள உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளில் பாதுகாப்பு அரிசி இருப்பாக 100,000 மெ.தொ. இருப்பினைப் பேணுதல்**

2008/08/27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, உணவு திணைக்களமானது அவசர நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்காக 100,000 மெ.தொ. அரிசி இருப்பினைப் பேணும் வகையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

**03. சந்தையில் அரிசியின் கிடைப்பனவினை உறுதி செய்தல்**

சந்தையில் அரிசித் தட்டுப்பாடு காரணமாக ஏற்படும் அரிசி விலைத்தளம்பலினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சந்தைக்குத் தேவையானபோது அரிசி இருப்பினை விடுவிப்பதன் மூலம் நுகர்வோருக்கு அரசியினைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.


**04. திணைக்கள மூலவளங்களினை முகாமை செய்வதற்காக அக்கறை தாரர்களுடன் (Stake holders) வினைத்திறன் வாய்ந்த ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்**

பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளின் அடிப்படையில் வினைத்திறனுடன் அவற்றினைப் பயன்படுத்தும் பொருட்டு மிகையாகவுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் வீடுகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அரச வருமானத்திற்கு பங்களிப்பு வழங்குதல்.

**05. பூச்சிகளற்ற உணவுத் தானிய சூழலினை ஏற்படுத்துதல்**

உயர் தரத்தில் தானியங்களை பூச்சிகள் இல்லாத வகையில் களஞ்சியப்படுத்தி வைப்பதனூடாக நுகர்வோருக்கு உயர் தரத்திலான தானியங்களை வழங்குதல்.

## (03). நிருவாக கட்டமைப்பு



# (04) நிருவாக கட்டமைப்பும் பதவியினரும்

## • நிருவாக கட்டமைப்பு

உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிருவாக மற்றும் பேணுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அனைத்து கணக்குகள் தொடர்பான நடவடிக்கைகளும் கணக்காளரினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருகோணமலை தானியகமவிலுள்ள 366 வீடுகள் திருகோணமலையிலுள்ள பொறுப்பதிகாரியினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை தானியகமவிலுள்ள 366 வீடுகள் திருகோணமலையிலுள்ள பொறுப்பதிகாரியினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. வெயாங்கொடை களஞ்சியத் தொகுதியானது வெயாங்கொடை களஞ்சியத் தொகுதி பொறுப்பதிகாரியினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சின் சட்டப் பிரிவு நடவடிக்கைகள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சட்ட உசாவுலரினால் மேற்கொள்ளப்பட்டன.


2015, டிசம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 230 பேரில் 116 ஊழியர்கள் பணியிலிருந்துள்ளனர். அவர்களுள் 29 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாக என்னிடமும், மீதியாயுள்ள 86 பேரில் 57 பேர் தரம் 11 மற்றும் 111 இல் பல்வேறு பதவிகளில் உணவுத் திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றனர்.

2015.01.01 இலுள்ளவாறு கடமையாற்றிய மொத்த பதவியணியினரில் 4% மானோர் இழைப்பாறியுள்ளனர். மேலும், 2015 இல் 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 05 முகாமைத்துவ உதவியாளர்களும் அமைச்சிற்கு நியமிக்கப்பட்டார்கள். அத்துடன், புதிய ஆட்சேர்ப்பாக 2015 இல் தரக்கட்டுப்பாட்டு அலுவலர் நியமிக்கப்பட்டமையானது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

- **2015 இல் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பதவியணி**

| | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2015.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறான பதவியணி |
|---|---|---|---|
| 01 | உணவு ஆணையாளர் | 01 | 01 |
| 02 | பிரதி உணவு ஆணையாளர்/ உதவி உணவு ஆணையாளர் | 02 | 01 |
| 03 | கணக்காளர் | 02 | 01 |
| 04 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | - |
| 05 | மொழி பெயர்ப்பாளர் | 01 | - |
| 06 | தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் | 01 | 01 |
| 07 | தானிய அளவையாளர் | 01 | - |
| 08 | வேலைப் பரிசோதகர் | 01 | 01 |
| 09 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | - |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 82 | 29 |
| 11 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22 | 08 |
| 12 | சுரங்க மேடை சேவையாளர்கள் | 08 | 08 |
| 13 | சாரதிகள் | 10 | 07 |
| 14 | அலுவலக உதவியாளர் சேவை | 22 | 11 |
| 15 | புகையூட்டுவோர் | 26 | 13 |
| 16 | சுத்திகரிப்பாளர்கள் | 02 | 10 |
| 17 | சுரங்க மேடை தொழிலாளர்கள் | 01 | 01 |
| 18 | காவலாளிகள் | 22 | 22 |
| 19 | களஞ்சிய தொழிலாளர்கள் | 24 | - |
| 20 | அமைய தொழிலாளர்கள் | - | 01 |
| 21 | பட்டதாரி பயிலுனர்கள் | - | 01 |
| **மொத்தம்** | | **230** | **116** |

- **2015 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையும் சேவையாற்றும் ஊழியர்களும்**



1. புதிய நியமனங்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 |
| II. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| III. | அமைய சாரதி | 01 |
| IV. | பட்டதாரி பயிலுனர் | 01 |

II. புதிய ஆட்சேர்ப்புக்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | தரக் கட்டுப்பாட்டாளர் | 01 |

III. இழைப்பாறல்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| II. | சுத்திகரிப்பாளர் | 01 |
| III. | அலுவலக உதவியாளர் சேவை | 01 |

IV. இடமாற்றல்கள் (வெளியக)

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| II | அரச முகாமைத்துவ உதவியாளர் | 05 |

V. இடமாற்றல்கள் (உள்ளக)

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |

VI. பதவி இடைநிறுத்தல்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அலுவலக ஊழியர் சேவை | 01 |
| II | சாரதி | 01 |

# (05). கணக்காய்வும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும்

- **கணக்காய்வு**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது உணவுத் திணைக்களத்தில் கணக்காய்வுப் பிரிவொன்றினை தாபித்துள்ளது. முறையான கணக்காய்வு மற்றும் இறுதிக் கணக்குகளை கணக்காய்வு செய்தல் என்பன அதன் பதவியினரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திணைக்களத்தின் உள்ளககணக்காய்வு நடவடிக்கைகள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்களுக்கான விடைகள் உணவுத் திணைக்களத்திலுள்ள அலுவலகத்தினால் அமைச்சுக்கான பிரதிகளுடன் உரிய தரப்புக்களுக்கு நேரடியாகவே அனுப்பி வைக்கப்படுகின்றன.

அதற்கிணங்க, 2015 டிசம்பர் 31 வரையில் 14 கணக்காய்வு தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளதுடன் அவை அனைத்துக்கும் திணைக்களம் பதிலளித்துள்ளது.

- **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உணவு திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை இங்கு குறிப்பிட்டு சொல்லலாம்.

# (06). நீதிமன்ற நடவடிக்கைகள்

2015 ஆம்ஆண்டின் இறுதிவரையில் உணவு திணைக்களத்தினால் மாவட்ட நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விபரம் பின்வருமாறு.

| | வழக்கு வகை | சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| I | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான பணத்தினை அளவீடு செய்வதற்காக | 02 |
| II. | களஞ்சிய வாடகை நிலுவையினை அறவீடு செய்வதற்காக | 06 |
| III. | களஞ்சிய உரிமையினைப் பெறுதல் | 04 |
| IV. | நட்டங்களினை அறவீடு செய்வதற்கு | 04 |
| V. | திருகோணமலை தானியகம வீடுகளை மீளப் பெறுவதற்கான வழக்குகள் | 09 |
| **மொத்தம்** | | **25** |

01. அக்மீனா பல் தீர்வை கூட்டுறவு சங்கமானது மதிப்பிழந்த காசோலைக்கான தீர்வனவாக ரூபா.1,050,277 செலுத்தியுள்ளதுடன் ரூபா.800,000 செலுத்த வேண்டியுள்ளதுடன் ரூபா. 65 மதிப்பிழந்த காசோலைக்கான கட்டணமாகும். பணமானது தொடர்ச்சியாக செலுத்தப்பட்டு வருகின்றது.

02. வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கொக்கல உணவுக் களஞ்சியத்திற்காக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ரூபா. 55,000 பெறுமதியுடைய காசோலைக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளாமை தொடர்பில் திணைக்களமானது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

03. திரு.டப்ள்யு.எச்.சுமதிபாலவிடமிருந்தான கடன் மீதி அறவீடு திரு. டப்ள்யு..எச்.சுமதிபாலவினால் செலுத்தப்படவேண்டிய தொகையான ரூபா.6,384,486.19 இனை அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் விவசாய பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

04. திரு.ஏ.டப்.குணசேகரவிடமிருந்தான கடன் மீதி அறவீடு - ரூபா. 847,349.43 தொகையுடைய மிகைக் கட்டணத்தினை அறவீடு செய்வதற்கு கண்டி மாவட்ட செயலகத்தில் வழக்கு இல. டீ.எம்.ஆர். தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழக்கு விசாரணை மீண்டும் 2016.03.23 ஆம் திகதியன்று நடாத்தப்படும்.

05. திரு.வில்ப் போபகேவிடமிருந்தான கடன் மீதி அறவீடு – காலி மாவட்ட நிதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு 2000.11.16 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, ரூபா. 1,314,236.58 மிகைக் கட்டணத் தொகையினை இவர் செலுத்தியிருக்கவில்லை. ஆகையால், நிறைவேற்றலினை அமுலாக்குவதற்கு குறித்த குற்றவாளியின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை செய்யும் போது உண்மையான தகவல்களினை வழங்கியிராமை தொடர்பில் காலி பிரதேச செயலகத்தில் விசாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

06. திரு.என்.ஈ. பண்டிதரத்னவிடமிருந்தான கடன் மீதி அறவீடு - ரூபா. 376,153.35 தொகையினை அறவீடு செய்வதற்காக அத்தனக்கல மாவட்ட செயலகத்தில் வழக்கு இல.1216 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர் இறந்துள்ளமையினால் அவரின் சார்பில் அத்தொகையினை அவரது மனைவி மற்றும் பிள்ளைகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு மீரிஹான பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

07. திரு. ஓ.ஜகத்வீரவிடமிருந்தான கடன் மீதி அறவீடு – கம்பஹா மாவட்ட நீதிமனறத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இல. 2749/M இற்கான தீர்ப்பின்படி, அவர் ரூபா. 371,180.20 மிகைக்கட்டணத்தினைச் செலுத்தியிருக்கவில்லை. அவரின் தற்போதைய தனிப்பட்ட முகவரிக்கு தீர்ப்பின் பிரதியானது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதுகுறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

08. திரு.எச்.எல்.எம் மென்டிஸிடமிருந்தான கடன் மீதி அறவீடு – கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவழக்கு இல. 35759/M இற்கான தீர்ப்பின்படி, அவர் ரூபா.351,968.82 மிகைக் கட்டணத்தனைச் செலுத்தியிருக்கவில்லை. ஆகையால், இதனை அறவிடு செய்வது தொடர்பில் ஓய்வூதிய பணிப்பாளருடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

09. திரு.ஆர்.எஸ்.ஜி. விக்கிரமரத்னவிடமிருந்தான கடன் மீதி அறவீடு - ஆதன கடனைப் பெறுவதற்காக ரூபா.128,279 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கான கடனுடன் தொடர்புடைய அவரின் முகவரி, கடன் உடன்படிக்கை மற்றும் ஏனைய ஆவணங்களினைப் பெறுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

10. திரு.எச்.ஏ.எஸ்.விமலசிறியிடமிருந்தான கடன் மீதி அறவீடு – இவர் செலுத்த வேண்டியுள்ள கடன் மீதியான ரூபா. 323,321 இனை ரூபா. 3000/- என்ற வகையில் தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு உணவு ஆணையாளருடன் இணங்கியுள்ளதுடன் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டு வருகின்றது.

11. திரு.ரஞ்சித் பெரமுணுகமவிடமிருந்தான கடன் மீதி அறவீடு – ரூபா. 218,229 மீதியினைக் கொண்ட ஆதனக் கடனினை அவர் ஏற்கனவே செலுத்தியுள்ளார்.

12. திரு.சாந்த மல்வானவிடமிருந்து கடன் மீதி அறவீடு. சட்டமா அதிபர் வருமதியாகவுள்ள ஆதன கடன் மீதியான ரூபா. 109,496 இனை அறவிடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகளினை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

13. ஒருகொடவத்தை நட்ட ஈட்டுக் கடன் 10,14,16 – வழக்கு இல. D.M.R/01815 விசாரணை நடைபெற்று வருவதுடன் நட்டஈட்டுத் தொகையான ரூபா. 1,028,500 இனை அறவீடு செய்யுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பிசுக்கால் நீதிமன்றித்திற்கு உரிய கடிதம் மூலமாக அத்தகைய நிறுவனமானது குறித்த முகவரியில் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

14. செலுத்த வேண்டிய மொத்த மீதியான ரூபா.910,602.91 இலிருந்து வெலிசறை இல. 05 – ரூபா. 250,000 மற்றும் இரண்டு தவணைக்கட்டணங்கள் 50,000 என்பன தீர்க்கப்பட்டன. மீதித் தொகையினை முறையாகச் செலுத்துவதற்கு உரிய தரப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் சட்டத்தரணி மீதித்தொகையினை விரைவாகச் செலுத்துமாறு அறிவிப்பதற்கு உடன்பட்டார்.

15. வழக்கு இல. 3,340,715.06, 18 தவணைக் கட்டணங்களின் அடிப்படையில் நிலுவையாயுள்ள களஞ்சிய வாடகையான ரூபா. 3,340,715.06 இனைச் செலுத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் தீர்க்கப்பட்டது. திருகோணமலை தானியகமவிலுள்ள 41 வீடுகளின் உரித்துடமை 2015 இல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

# (07). திணைக்கள களஞ்சியங்களும் வீடுகளும்

## • திணைக்கள களஞ்சியங்கள்

நாடு பூராகவும் 21 மாவட்டங்களில் 110 உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்கள் தொழிற்பட்டு வருகின்றன. அவை கீழ்க்காணும் நோக்கங்களுக்காக பொருத்தமான வழிமுறைகளில் அரச சொத்துக்கள் முகாமை செய்யப்பட்டு வருகின்றன.

| # | களஞ்சியங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டவை | 56 |
| 2. | வாடகையின்றி அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டவை | 32 |
| 3. | உணவுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுபவை | 12 |
| 4. | மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளர் பொறுப்பிலுள்ளவை | 10 |
| **மொத்தம்** | | **110** |

## • திணைக்கள வீடுகள்

உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமாக திருகோணமலை சீனக் குடாவிலுள்ள தானியகமவில் 366 வீடுகள் உள்ளன.

| # | 2015.12.31 இலுள்ளவாறு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உணவுத் திணைக்கள அலுவலகம் | 01 |
| 2. | சுற்றுலா விடுதி | 01 |
| 3. | விண்ணப்பதாரிகளுக்கு கையளிக்கப்பட வேண்டிய அட்டவணைகள் | 07 |
| 4. | **வாடகைக்கு விடப்பட்டவை** | |
| • | பிறிமா நிறுவன ஊழியர்களுக்கு | 182 |
| • | தனியார் நிறுவனங்களுக்கு | 01 |
| • | **அரச உத்தியோகத்தர்களுக்கு** | 63 |
| • | **முப்படை மற்றும் பொலிஸுக்கு** | 55 |
| • | அரை அரசாங்க நிறுவனங்களுக்க | 56 |
| **மொத்தம்** | | **366** |

## ❖ திணைக்கள களஞ்சியங்களின் விபரங்கள்

2015.12.31 இலுள்ளவாறு, திணைக்களத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற களஞ்சியங்களில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது கட்டணமின்றி வழங்கப்பட்டுள்ள களஞ்சியங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளவு மெ.தொ . | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| கொழும்பு மாவட்டம் | | | | |
| 01 | ஒருகொடவத்தை - 01 | 24624 | 6000 | இலங்கைச் சுங்கம் |
| 02 | ஒருகொடவத்தை - 02 | 24624 | 6000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 03 | ஒருகொடவத்தை - 03 | 20304 | 5000 | கல்வி வெளியிட்டுத் திணைக்களம் |
| 04 | ஒருகொடவத்தை - 04 | 19008 | 5000 | |
| 05 | ஒருகொடவத்தை - 05 | 19008 | 4500 | அய்கோன் விநியொகஸ்தர்கள் |
| 06 | ஒருகொடவத்தை - 06 | 20304 | 5000 | கல்வி அமைச்சு |
| 07 | ஒருகொடவத்தை - 07 | 20304 | 5000 | பேரிடர் நிவாரண அமைச்சு |
| 08 | ஒருகொடவத்தை - 08 | 16560 | 4000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 09 | ஒருகொடவத்தை - 09 | 16560 | 4000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 11 | ஒருகொடவத்தை - 10 | 18183 | 4000 | இலங்கைச் ச |
| 12 | ஒருகொடவத்தை - 14 | 13436 | | |
| 13 | ஒருகொடவத்தை - 15 | 11448 | | |
| 14 | ஒருகொடவத்தை - 16 | 18206 | | ராங் கொன்ரைனர் ரேரமினல்ஸ் லிமிட்டட் |
| 11 | ஒருகொடவத்தை - 10 | | | |
| 15 | அலுவலக கட்டிடம் | | | |
| 16 | ஹுனுப்பிட்டிய அலுவலக அறை | 755 | - | திருமதி.சுனித்தா குணசிங்க |
| 17 | இரத்மலானை - 03 | 41200 | 7520 | செஞ்சிலுவைச் சங்கம் |
| 18 | இரத்மலானை - 05 | 21008 | 2900 | தொழில் திணைக்களம் |
| 19 | பாண்ஸ் பிளேஸ் கட்டிடம் A | - | - | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 20 | பாண்ஸ் பிளேஸ் கட்டிடம் B | - | - | ஒம்பூட்ஸமன் அலுவலகம் |
| 21 | பாண்ஸ் பிளேஸ் கட்டிடம் C | - | - | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் |
| 22-23 | பாண்ஸ் பிளேஸ் கட்டிடம் D-E | - | - | சமுர்த்தி ஆணையாளர் நாயகம் |
| 24 | பாண்ஸ் பிளேஸ் பதிவேட்டு அறை | - | 5000 | உணவுத் திணைக்களம் |
| மொத்தம் | | **305532** | **63920** | |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| **கம்பஹா மாவட்டம்** | | | | |
| 25 | வெயாங்கொடை- 01 | 29040 | 5900 | லங்கா பாதோஸ் |
| 26 | வெயாங்கொடை - 02 | 21750 | 4000 | ஏபிள் ஹால்டிங்ஸ்லிமிட்டட் |
| 27 | வெயாங்கொடை - 03 | 6142 | 1200 | உணவுத் திணைக்களம் |
| 28 | வெயாங்கொடை - 04 | 7552 | 900 | பண்டார இன்டஸ்ரியல் |
| 29 | வெயாங்கொடை - 05 | 12373 | 1400 | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் |
| 30 | வெயாங்கொடை - 06 | 7568 | 1100 | உணவுத் திணைக்களம் |
| 31 | வெயாங்கொடை - 07 | 28860 | 5400 | |
| 32 | வெயாங்கொடை - 08 | 28860 | 5400 | லங்கா பாதோஸ் |
| 33 | வெயாங்கொடை - 09 | 28860 | 5400 | உணவுத் திணைக்களம் |
| 34 | வெயாங்கொடை - 10 | 28860 | 5400 | லங்கா சதொச இயந்திரவியல் பிரிவு |
| 35 | வெயாங்கொடை - 11 | 33200 | 6200 | டொன் மியோன் இன்ஸ்ரிருயூட் |
| 36 | வெயாங்கொடை - 13 | 24288 | 6800 | லங்கா சதொச |
| 37 | வெயாங்கொடை - 16 | 6370 | 1200 | லங்கா சதொச |
| 38 | வெயாங்கொடை - 17 | 6279 | 770 | சிசிஈபி |
| **குருநாகல் மாவட்டம்** | | | | |
| 39 | அஸ்வெடும | 6132 | - | வட மேல் மாகாண சபை |
| 40 | மஹவ இல- 01 | 4698 | 800 | உணவுத் திணைக்களம் |
| 41 | மஹவ இல- 02 | 13118 | 1300 | |
| 42 | மல்கடுவவ இல - 01 | 5227 | 2000 | செயட் மொஹமட் லிமிட்டட் |
| 43 | மல்கடுவவ இல - 02 | 4827 | 2000 | |
| 44 | மல்கடுவவ இல GI களஞ்சியம் | 10498 | 2000 | நிக்கவரட்டிய கறீன் வலே பிளான்ரேஷன் லிமிட்டட். |
| 45 | கெட்டுவன இல - 01 | 6336 | 2000 | நெ.ச.ச / லங்கா சதொச |
| 46 | கெட்டுவன இல - 02 | 5544 | 2000 | செலின் எக்ஸ்பொர்ட் |
| 47 | கெட்டுவன இல - 03 | 5544 | 2000 | கூ.மொ.தா |
| 48 | கெட்டுவன இல - 04 | 5544 | 2000 | |
| **கண்டி மாவட்டம்** | | | | |
| 49 | பள்ளேகல | 15484 | 1500 | எச்.எம்.எஸ்.எஸ்.தர்மசேன |
| 50 | கட்டுகஸ்தோட்டை | 6490 | 1700 | றெண்டஸ் மார்கெற்றிங் |
| **கேகாலை மாவட்டம்** | | | | |
| 51 | கேகாலை – பரகம்மன 01 | 5500 | 1500 | உணவு திணைக்களம் |
| 52 | கேகாலை – பரகம்மன 02 | 5500 | 1500 | |
| 53 | கேகாலை – பரகம்மன 03 | 3960 | - | |
| **காலி மாவட்டம்** | | | | |
| 54 | பூஸா இல - 02 | 23721 | 3750 | லங்கா சதொச / மாவட்ட செயலகம் |
| **மொத்தம்** | | **398125** | **77120** | |


| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |
| 55 | பூஸா இல - 03 | 23721 | 3750 | லங்கா சதொச |
| 56 | பூஸா இல - 04 | 56784 | | பிரதேச செயலகம்-ஹிக்கடுவ |
| 57 | பூஸா இல - 05 | 55770 | | |
| 58 | கட்டுகொட இல. - 01 | 20545 | 3825 | ட்ரைகோ மறிரைம் |
| 59 | கட்டுகொட இல. - 02 | 9532 | 1775 | |
| **மாத்தறை மாவட்டம்** | | | | |
| 60 | மெதவத்தை இல - 01 | 7264 | 965 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 61 | மெதவத்தை இல - 02 | 10000 | 1870 | மாவட்ட செயலாளர்- காலி |
| 62 | வெலிகம களஞ்சியம் | 8019 | 1300 | பியசிறி ஸ்ரோர்ஸ் |
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | | | | |
| 63 | ஹம்பாந்தோட்டை களஞ்சியம் | 14023 | 4500 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 64 | கஹந்தவ இல - 01 | 3517 | 1900 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 65 | கஹந்தவ இல - 02 | 4090 | 1900 | |
| **அநுராதபுரம் மாவட்டம்** | | | | |
| 66 | சிராவஸ்திபுர இல. - 01 | 25520 | 3575 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 67 | சிராவஸ்திபுர இல - 02 | 23930 | 3350 | |
| 68 | கெகிராவ இல - 01 | 7950 | 1275 | |
| 69 | கெகிராவ இல - 02 | 7150 | 1145 | |
| 70 | சேனாநாயக்க இல. - 01 | 2461 | 390 | பப்ளிக் இன்ரிகீறேட்டட் அக்றேறியன் லிமிட்டட் |
| 71 | சேனாநாயக்க இல. - 02 | 2461 | 396 | சுதேச மருத்துவ அமைச்சு |
| 72 | சேனாநாயக்க இல. - 03 | 11017 | 2400 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 73 | சேனாநாயக்க இல. - 04 | 2185 | 325 | பப்ளிக் இன்ரிகீறேட்டட் அக்றேறியன் லிமிட்டட் |
| **பொலநறுவை மாவட்டம்** | | | | |
| 74 | கதுருவெல இல. - 01 | 13419 | 2880 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 75 | கதுருவெல இல - 02 | 20187 | 3200 | |
| 76 | ஹிங்குராகொட இல - 01 | 23550 | 4400 | கூ.மொ.தா |
| 77 | ஹிங்குராகொட இல- 02 | 23550 | 4400 | |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | |
| 78 | பிளக்புல் இல - 01 | 1514 | 280 | நுவரெலியா விவசாயஅபிவிருத்தி சங்கம். |
| 79 | பிளக்புல் இல- 02 | 1836 | 150 | |
| 80 | பிளக்புல் இல – 02 மேல் தளம் | 1824 | - | |
| 81 | பிளக்புல் இல - 03 | 2335 | 435 | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | | | |
| 82 | இரத்தினபுரி களஞ்சியம் | 9611 | 1800 | பம்பரக்காட்டுவ மாரப்பன ப.நோ.கூ.ச மற்றும் லங்கா சதொச |
| 83 | ஒபநாயக்க இல. - 01 | 7730 | 1335 | லால் ஸ்ரோர்ஸ் |
| 84 | ஒபநாயக்க இல.- 02 | 5300 | 850 | மின்சார சபை |
| **மொத்தம்** | | **406795** | **54371** | |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| 85 | எஹெலியகொட இல - 01 | 2337 | 435 | எஹெலியகொட ப.நோ.கூ.ச |
| 86 | எஹெலியகொட இல - 02 | 2373 | 435 | |
| 87 | எஹெலியகொட இல - 03 | 4806 | 900 | |
| 88 | கஹவத்த இல - 01 | 3180 | 590 | பன்னில்பற்று ப.நோ.கூ.ச |
| 89 | கஹவத்த இல - 02 | 1881 | 150 | |
| **மொனராகலை மாவட்டம்** | | | | |
| 90 | மொனராகலை இல. - 01 | 22480 | 3150 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| **மாத்தளை மாவட்டம்** | | | | |
| 91 | மாத்தளை இல - 01 | 21448 | 3000 | திரு.மொஹமட் அஷ்ரப் |
| **பதுளை மாவட்டம்** | | | | |
| 92 | பதுளை இல.-01 | 7245 | 1380 | உணவுத் திணைக்களம் |
| 93 | பதுளை இல. -02 | 6781 | 1500 | மின்சார சபை |
| 94 | ஹப்புத்தளை இல - 01 | 1653 | 130 | ஹப்புத்தளை ப.நோ.கூ.ச |
| 95 | ஹப்புத்தளை இல - 02 | 1806 | 120 | |
| **அம்பாறை மாவட்டம்** | | | | |
| 96 | அம்பாறை இல - 01 | 11368 | 2125 | நெல் சந்தப்படுத்தல் சபை |
| 97 | அம்பாறை இல - 02 | 11368 | 2125 | உணவுத் திணைக்களம் |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | | | |
| 98 | மட்டக்களப்பு இல. - 01 | 18000 | 6000 | பிரான்டெக்ஸ் |
| 99 | மட்டக்களப்பு இல. - 02 | 17600 | 6000 | பிரான்டெக்ஸ் |
| 100 | மட்டக்களப்பு இல. - 03 | 17600 | 6000 | பிரான்டெக்ஸ் |
| 101 | மட்டக்களப்பு இல. - 04 (புகையிரத நிலைய களஞ்சியம்) | 13560 | 2800 | கூமொதா/ மாவட்ட செயலகம, மட்டக்களப்பு |
| **புத்தளம் மாவட்டம்** | | | | |
| 102 | புத்தளம் இல. - 01 | 5600 | 600 | மாவட்ட செயலகம் (புத்தளம் |
| 103 | புத்தளம் இல. - 02 | 9600 | 1000 | |
| **வவுனியா மாவட்டம்** | | | | |
| 104 | வவுனியா இல. - 01 | 3763 | 775 | கூ.மொ.தா |
| 105 | வவுனியா இல - 02 | 4165 | 165 | மாவட்ட செயகம் வவுனியா |
| 106 | வவுனியா இல - 03 | 684 | 160 | |
| **யாழ் மாவட்டம்** | | | | |
| 107-109 | நாவற்குழி (மூன்று களஞ்சியங்கள்) | 43200 | 7500 | மாவட்ட செயகம் வவுனியா |
| **மன்னார் மாவட்டம்** | | | | |
| 110 | முருங்கன் | 9720 | 1500 | உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் |
| **மொத்தம்** | | **242218** | **48540** | |
| முழு மொத்தம் | | **1352670** | **243951** | |

- தற்போது, உணவுத் திணைக்களமானது மூன்று களஞ்சியங்களினைக் கையேற்றுள்ளது.


1. ஒம்பூட்ஸ்மென் அலுவலகம் தொழிற்பட்ட பாண்ஸ் பிளேஸ் பி கட்டிடம்.
2. நெல் சந்தைப்படுத்தல் சபையினால் பயன்படுத்தப்பட்ட கஹதுவட 1 மற்றும் 2

## இலங்கையில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்கள் வியாபித்துள்ள இடங்கள்




## ❖ களஞ்சிய வாடைகை வருமானம்

| ஆண்டு | கிடைக்க வேண்டிய வருமானம் | பெற்ற வருமானம் ருபா. |
|---|---|---|
| **2014** | 80,000,000.00 | 73,072,795.86 |
| **2015** | 88,285,229.27 | 73,140,466.30 |




## ❖ வீடுகளின் மூலமான வருமானம்

| ஆண்டு | கிடைக்க வேண்டிய வருமானம் | பெற்ற வருமானம் ருபா. |
|---|---|---|
| **2014** | 5,245,380.00 | 4,978,211.20 |
| **2015** | 5,451,575.00 | 4,608,793.59 |



# (08). கணக்கீட்டு நடைமுறைகளின் மீளாய்வு

உணவுத் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் செயல்திட்டம் என்பன அரசாங்கத்தின் கொள்கையான உணவுப் பாதுகாப்பினை அமுல்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி உயர் தரத்திலான பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணுவதற்காக தற்போதிருக்கும் பண்டகசாலைகளின் சௌகரியத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீடு இதனை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வருடாந்த மதிப்பீடானது திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த சில நோக்கங்களுக்காக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும், தேவையான இலக்குகளை அடைவதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக செலவின கட்டுப்பாட்டு திட்டமிடல்கள் அமுல்படுத்தப்பட்டன. வருட ஆரம்பத்தில் நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கும் மேலான திணைக்களத்தின் தேவைகள் நி.பி.66 மாற்றல்களின் நியதிகளின்படி நிறைவு செய்யப்பட்டன.

## மீண்டுவரும் செலவினம்

2015 இல் ஆகக்குறைந்த நிருவாக செலவின கொள்கை அமுல்படுத்தப்பட்ட போதிலும் வருடாந்த மதிப்பீட்டின் மூலமான மீண்டுவரும் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சுவதற்கான வழியாக அமைந்திருந்ததுடன் செலவின கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட மிகைகள் நி.பி.66 இன்படி அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் தேவையான விடயங்களுக்கு மாற்றப்பட்டன.

திணைக்களமானது ஏற்பாடுகளின் எல்லைகளை விஞ்சாமல் கணக்கீட்டு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைவாகவும் செயற்பட்டதன் காரணமாக இடர்களிலிருந்நது விடுபட்டு இருந்ததுடன் தேவையான விரிவாக்கல்களுக்கான எற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான ஆற்றலையும் கொண்டிருக்கின்றது.

## மூலதன செலவினம்

மூலதன விடயம் தொடர்பில் வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்பாடுகள் உச்சளவில் பயன்படுத்தப்பட்டன.

அரிசிக் கொள்வனவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது தீர்மானிக்கப்பட்டவாறான அரிசி இருப்பினைக் கொள்ளவனவு செய்வதற்கேற்ப களஞ்சிய வசதிகள் இன்மையினால் முழுமையாகப் பயன்படுத்தப்பட முடியவில்லை.

## கணக்குகளை மூடுதல்

உணவு திணைக்களத்தின் இரண்டு மூடப்பட்ட கணக்குகளில் ஒன்றான சமயலறை மற்றும் பேக்கரி முற்பணக் கணக்கின் தொழிற்படு நட்டங்களை பதிவளிப்பு செய்வதற்கான பொறுப்புக்குரிய அங்கீகாரம் 2015 பெறப்பட்டுள்ளது.

உணவு விநியோக முற்பணக் கணக்கு போன்ற ஏனைய கலைப்புச் செய்யப்படுகின்ற கணக்குகளில் அத்தகைய சொத்துக்கள் உணவுத் திணைக்களத்தின் தொழிற்பாட்டுக்கென பயன்படுத்தப்படுவதால் அது தொடர்பில் சில பிரச்சனைகள் எழுகின்றன. ஆகையால் அத்தகைய கணக்குகளை மூடுவதற்கு சாத்தியம் குறைவாகவே காணப்படுகின்றது. கடன்பட்டோரின் எஞ்சிய மீதியினையும்பெற்றுக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் படியான தொழிற்படு நட்டத்தினையும் பதிவளிப்பு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

## நிறைவு

உணவு திணைக்களமானது அரசாங்க கொள்கையினைக் கருத்தில் கொண்டு தேவை கருதி விசேடமாக சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறித்த ஆண்டுக்கான கணக்கீட்டு நடைமுறைகள் மிகுந்த அர்ப்பணிப்புடனும் வெளிப்படையாகவும் நடைமுறைக்கு சாத்தியமான வழிமுறைகளில் அனைத்து சட்ட ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி குறைபாடுகள் எதுவுமின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



ஐ.பீ.கொத்தலாவலை
கணக்காளர்
உணவு ஆணையாளர் திணைக்களம்

# (09). ஆதனங்களும் சொத்துக்களும்

உணவு திணைக்களத்தின் சொத்துக்கள் முற்பணக் கணக்கின் கீழ் உணவு விநியோகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களாக இன்னமும் காட்டப்பட்டு வருகின்றன. முழுச் சொத்துக்களும் 2015.12.31 வரையில் திணைக்களத்தின் தொழிற்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, 2015.12.31 ஆம் திகதிய திணைக்களத்தின் சொத்துப் பெறுமதி மதிப்பாய்வு பின்வருமாறு.

| # | சொத்துக்கள் | 2015.12.31 இலுள்ளவாறான கொள்விலைப் பெறுமதி ரூபா. |
|---|---|---|
| **I. உணவு விநியோக முற்பணக் கணக்கின் கீழான சொத்துக்கள்** | | |
| | கட்டிடங்களும் பொருத்துக்களும் | 121,065,254.11 |
| | வாகனங்கள் | 13,499,924.31 |
| | இயந்திரம் மற்றும் உபகரணம் | 9,215,359.14 |
| | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 22,962,954.35 |
| | **மொத்தம்** | **166,743,491.91** |

# (10). வருமானமும் அறவீடுகளும்

- **வருமானம்**

| # | 2016.01.01 இலுள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவேண்டிய கடன் மீதி | ரூபா |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 77,029,281.56 |
| II. | வீட்டு வாடகை | 3,358,879.78 |
| **மொத்தம்** | | **80,388,161.34** |

| # | குறித்த ஆண்டில் அறவிடப்பட்ட வருமானம் | ரூபா. |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 73,140,466.30 |
| II. | வீட்டு வாடகை | 4,608,793.59 |
| **மொத்தம்** | | **77,749,259.89** |

| # | 31.12.2015. இலுள்ளவாறான கடன் மீதி | ரூபா. |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 77,029,281.56 |
| II. | வீட்டு வாடகை | 3,358,879.78 |
| **மொத்தம்** | | **80,388,161.34** |

**அறவீடுகள்**

**கூட்டுறவு கடன் மீதி**

| | |
|---|---|
| 2015.01.01 ஆம் திகதியன்று கூட்டுறவுத் துறையினால் மேற்கொள்ளப்பட்டவற்றின் மீது மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய அறவீடுகள் | ரூபா.199,766,413.71 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அறவிடுகள் | ரூபா. 260,000.00 |
| 2015.12.31 திகதியிலுள்ளவாறான கடன் மீதி | ரூபா.199,506,413.71 |

❖ மிகைக் கட்டண மீதிகள்

| | |
|---|---|
| 2015.01.01 இலுள்ளவாறு அறவிடப்படவேண்டிய மிகைக்கட்டண மீதி | ரூபா.49,477,098.63 |
| 2015 இல் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் | - |
| 2015 அறவீடு செய்யப்பட்ட மிகைக்கட்டணம் | ரூபா. 54,650.83 |
| 2015.12.31 இல் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி | ரூபா.49,422,447.80 |

# (11). நிதி அறிக்கைகள்

தலைப்பு இல. : 300

அமைச்சு / திணைக்களம் : உணவு ஆணையாளர் திணைக்களம்

நிகழ்ச்சித்திட்ட இல. : 01

கருத்திட்ட இல. : 01

**மீண்டுவரும் செலவினம்**

| விபரணம் | 2014 உண்மைச் செலவினம் ரூபா | 2015 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | 2015 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | 2015 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015 உண்மைச் செலவினம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 42,482,259.00 | 51,200,000.00 | 53,800,000.00 | 51,303,035.00 | 2,496,965.00 |
| ஏனையவை | 108,276,346.00 | 153,040,000.00 | 152,887,000.00 | 141,338,459.00 | 11,548,541.00 |
| **மொத்தம்** | **150,758,605.00** | **204,240,000.00** | **206,687,000.00** | **192,641,494.00** | **14,045,506.00** |

*மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு இருப்பு முறைமையினை விருத்தி செய்தல்*

| மூலதன செலவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விடயம் | விபரங்கள் | 2014 உண்மைச் செலவினம் ரூபா. | 2015 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | 2015 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015 உண்மைச் செலவினம் ரூபா. | 2015 மீதி ரூபா விடயம் |
| **மூலதன நிதி மூல புனரமைப்பும் அபிவிருத்தியும்.** | | | | | | |
| 2001 | கட்டிடமும் நிருமாணமும் | 14,290,936.00 | 10,000,000.00 | 10,000,000.00 | 666,833.00 | 9,333,167.00 |
| 2002 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 461,493.00 | 200,000.00 | 200,000.00 | - | 200,000.00 |
| 2003 | வாகனம் | 1,049,240.00 | 500,000.00 | 531,000.00 | 530,560.00 | 440.00 |
| | மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | | | | | |
| 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 883,973.00 | 400,000.00 | 517,000.00 | 507,330.00 | 9,670.00 |
| 2103 | இயந்திரமும் உபகரணமும் | 16,160.00 | 200,000.00 | 200,000.00 | 67,500.00 | 132,500.00 |
| 2401 | பயிற்சியும் திறன் விருத்தியும் | 262,700.00 | 230,000.00 | 235,000.00 | 235,000.00 | - |
| 2502 | உணவுக் களஞ்சிய திருத்த வேலைகள் | - | 10,000,000.00 | 10,000,000.00 | - | 10,000,000.00 |
| | **மொத்தம்** | **16,964,502.00** | **21,530,000.00** | **21,683,000.00** | **2,007,223.00** | **19,675,777.00** |

| நிதி மூலங்கள் | | 2014 உண்மைச் செலவினம் ரூபா. | 2015 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | 2015 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | 2015 உண்மைச் செலவினம் ரூபா. | 2015 மீதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| நிகழ் சித்தி ட்டம் | விபரங்கள் | | | | | |
| **01.** | திரட்டு நிதியம் | 167,723,107.00 | 225,770,000.00 | 228,370,000.00 | 194,648,717.00 | 33,721,283.00 |
| **07.** | ஒதுக்கீட்டுச் சட்டம் | - | - | - | - | - |
| | விசேட சட்ட சேவைகள் | - | - | - | - | - |
| | வெளிநாட்டு உதவி | - | - | - | - | - |
| | கடன்கள் | - | - | - | - | - |
| | உதவிகள் | - | - | - | - | - |
| | எதிர்பார்க் கப்பட்ட வெளிநாட் டுதவி | - | - | - | - | - |
| | கடன் | - | - | - | - | - |
| | உதவி | - | - | - | - | - |
| | | - | - | - | - | - |
| | வெளிநாட்டு உதவி | - | - | - | - | - |
| **01+07** | **மொத்த செலவினம்** | **167,723,107.00** | **225,770,000.00** | **228,370,000.00** | **194,648,717.00** | **33,721,283.00** |

# (12). செயல்முறையும் முன்னேற்றமும்

- **வருமானத்தினை மேம்படுத்துதல்**

1. திணைகளத்தினால் பயன்படுத்தப்படாதுள்ள களஞ்சியங்களினை குத்தகை வாடகைக்கு வங்குதல் மற்றும் தானியகமவிலுள்ள வீடுகளினை வடகைக்கு வழங்குதல் என்பன திணைக்களத்தின் பிரதான வருமான மூலங்களாக உள்ளன. வாடகை உடன்படிக்கைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் வாடகை தொகைகளினை மீளாய்வு செய்து புதிய உடன்படிக்கைகளினை மேற்கொள்வதற்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. இதன்மூலமாக, திணைக்களமானது அரச நிதியினை மேம்படுத்தும் நோக்குடன், ரூபா. 73,140,466.30 இனைக் களஞ்சியங்களிலிருந்தும் வீடுகளின் வாடகையிலிருந்து ரூபா. 4,608,793.59 இனையும் அரச வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

3. திணைக்களத்தின் கீழ் இரண்டு முற்பணக் கணக்குகள் இருந்துள்ளன. கலைப்புச் செய்யப்பட்டு வருகின்ற உணவு விநியோக முற்பணக் கணக்கின் உணவு முத்திரை முறைமையின் கீழ் உணவு விநியோகத்திற்கென கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கான வருமதியிலிருந்து ரூபா.260,000 இனை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளினை திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

4. திணைக்களமானது மேற்குறித்த கணக்கிலுள்ள ரூபா. 49,422,447.80 மிகைக்கட்டண மீதியினை அறவீடு செய்துள்ளது.

5. ஏனைய முற்பணக் கணக்காக இருந்த சமயலறை மற்றும் பேக்கரி நட்டங்களின் மீதி தவிர்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கணக்குகள மூடப்பட்டுள்ளதுடன் 2015 இற்கான ஏற்பாடுகளைப் பெறும் பொருட்டு உரிய மீதிகளினைப் பதிவளிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.